**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 261/2023**

**PROSECUTION WITNESS NO.3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ரீஷ்வான் | **Caste** | : |
| **Father's/Husband Name** | : முகமது சுல்தான் | **Religion** | : **Muslim** |
| **Village** தெரு | : அய்யம்பேட்டை, சின்னதைக்கால் | **Calling** | : கறிக்கடை |
| **Taluk** | : பாபநாசம் | **Age** | : **23/2023** |

**(Accused Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.12.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. ர.நித்யா**, தட்டச்சர்

<u>**C.C.No. 261/2023 20.12.2023**</u> **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்**: 12.13

## **முதல் விசாரணை**:

**1.**நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கறிக்கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 சதாம் ஹீசைன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது. கடந்த 31.05.2023 ம் தேதி மாலை நேரத்தில் SNM நகர் ராயல் சிட்டி ரோட்டில் நானும் எனது நண்பர் சதீஷ் என்பவரும் பேசி கொண்டிருந்தோம். அப்போது கிழக்கு காவல் நிலைய போலீசார் அந்த இடத்திற்கு வந்து சதாம் ஹீசைனின் இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்மந்தமாக விசாரித்தார்கள். பின்னர் போலீசார் பேப்பரில் படம் வரைந்தார்கள். மற்றொரு பேப்பரில் எங்களை பற்றியும் கீழ வாசல் காவல் நிலையம் பற்றியும் எழுதி எங்களிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நானும் எனது நண்பர் சதீஷ் ம் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். (**பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## **எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

**2.**நான் அய்யம்பேட்டையில் வசிக்கிறேன் என்றால் சரிதான். சதாம் ஹீசைன் என்பவர் என்னுடன் வேலை பார்க்கும் ஹனிபா என்பவரின் தம்பி. 31.05.2023 ம் தேதி கீழ வாசலிலுள்ள இறைச்சி கடையில் டெலிவரி முடித்து விட்டு நானும் சதீஷ் என்பவரும் SNM நகர் அருகே பேசிக் கொண்டிருந்தோம். அப்போது 2 ஆண்

**C.C.No. 261/2023**

போலீசார் அங்கு வந்தனர். SNM நகர் மக்கள் கூட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். நாங்கள் நின்றிருந்த பகுதியில் மக்கள் கூட்டம் இல்லை. அந்த போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். அ.சா. 1 எனது நண்பர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையெப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவயிடத்தில் கையெழுத்து செய்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.